# இரட்சிப்பு டிசம்பர் 2025 யுனிகோடு



## இயக்குநர் கடிதம்...

FROM THE MISSION DIRECTOR'S DESK

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

இவ்வாண்டின் 11 மாதங்கள் நம்மோடிருந்து, தம் கிருபையால் நம்மை வழிநடத்தி, 12ம் மாதத்தை நமக்குத் தந்த வானாதி வானவருக்கு நன்றிகளை ஏறெடுப்போம்.

இம்மாதம் 1முதல் 24 தேதிகளில் வருகையின் காலம், 14ம் தேதி வெண்மை கிறிஸ்துமஸ், 24ம் தேதி கிறிஸ்மஸ் ஆயத்தம், 25ம் தேதி கிறிஸ்மஸ் பண்டிகை, 28ம் தேதி தூய குடும்ப ஞாயிறு, 31ம் தேதி புத்தாண்டு ஆயத்தம் ஆகியவற்றை ஆசரிக்கிறோம். திருச்சபையானது கிறிஸ்துவை மேசியாவாகவும் உலகரட்சகராகவும் அடையாளப்படுத்தி ஆசரிக்கும் காலமாகிய அட்வென்ட காலங்களை பக்திவிருத்தி யுடன் ஆசரித்து, வரவிருக்கிற மேசியாவாகிய இயேசு கிறிஸ்துவை வரவேற்போம்.

'ஜெப-ஜன்னல் - ஜெபநேரங்கள் (டிச.12,19,26), 'அனைவரும்-ஊழியத்தில்' கைபிரதி ஊழிய திட்டம், 'வேதாகம-போட்டிகள்' ஆகிய நமது திட்டங்களில் பங்குபெற உங்களை அன்புடன் அழைக்கிறோம். வலைதள ஊழியங்கள் (www.ratchippu.com), பத்திரிக்கை ஊழியங்கள், காணொலி-செய்தி ஊழியங்கள், புத்தக-வெளியீட்டு ஊழியங்கள், கைப்பிரதி ஊழியங்கள், மிஷனரி ஊழியங்கள், திருச்சபை ஊழியங்கள் ஆகிய நமது ஊழிய இயக்குநரின் அனைத்து ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

ஜெப-விண்ணப்பங்கள், அனுபவ-சாட்சிகள் மற்றும் காணிக்கைகள் அனுப்புவோர் நமது ஊழிய இயக்குநரின் பெயருக்கு அனுப்பிவையுங்கள். தகவல்-தொடர்பு விபரம், வங்கி விபரம், UPI விபரம் மற்றும் QR CODE ஆகியவை பக்கம் 19-ல் மற்றும் நமது வலைதளத்தில் (www.ratchippu.com) தரப்பட்டுள்ளன.. தேவகிருபை உங்களோடு இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

# தமிழ் வேதாகமங்களின் ஒற்றுமைத் திரட்டு

வேத-வரிகள்-178 டிசம்பர் 2025 லூக்கா - 2:7

**சத்திய வேதம் (ரேனியஸ்-1840)**
மரியாள் தன் முதற்பேறான குமாரனைப்பெற்று, அவரைப் புடவைகளிற்சுற்றி, சத்திரத்திலே அவர்களுக்கு இடமில்லாதபடியினாலே, அவரைப் பசுத்தொட்டியிலே வைத்தாள்.

**பரிசுத்த வேதாகமம் (பவர்-1867)**
மரியாள் தன் முதற்பேறான குமாரனைப்பெற்று, சத்திரத்திலே அவர்களுக்கு இடமில்லாதிருந்தபடியினால், பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தினாள்.

**திருவிவிலியம் (பொது-1995)**
மரியா தம் தலைமகனைப் பெற்றெடுத்தார். விடுதியில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. எனவே, பிள்ளையைத் துணிகளில் பொதிந்து தீவனத் தொட்டியில் கிடத்தினார்.

**பரிசுத்த பைபிள் (இ.ஆர்.வி-1998)**
மரியாள் தன் முதல் மகனை ஈன்றெடுத்தாள். விடுதிகளில் அறைகள் எதுவும் கிடைக்கவில்லை. எனவே, குழந்தையை துணிகளால் சுற்றி, ஆடு-மாடுகள் உணவு உண்ணும் இடததில் வைத்தாள்.

## ஜெப-ஜன்னல் ஜெப-விண்ணப்பங்கள் - டிசம்பர் 2025

**கர்த்தரை நோக்கி மன்றாடுவோம் - COME! LET US ALL INTERCEDE TO GOD**

1)அகில உலக சமாதானத்துக்காக... கம்போடியா-தாய்லாந்து, இஸ்ரேல்-சிரியா, இஸ்ரேல்-ஹமாஸ், இந்தியா-பாக். மற்றும் இஸ்ரேல்-ஈரான் போர் நிறுத்தங்கள் முழுமையாக கடை பிடிக்கப்பட... உக்ரைன்-ரஷ்யா போர் முடிவுக்கு வர... இலங்கை, பாகிஸ்தான், வங்கதேச பொருளாதாரம் சீரடைய... இயற்கை பேரிடர்களிலிருந்து மக்கள் பாதுகாக்கப்பட...

2)இந்திய மக்களின் நல்வாழ்வுக்காக... இந்தியாவில் மதவாதம், பிரிவினைவாதத்தை ஊக்குவிப் போரின் சூழ்ச்சிகள் முறியடிக்கப்பட... ஒடுக்கப்பட்ட மற்றும் சிறுபான்மை மக்களுக்கு எதிரான ஒடுக்குதல்கள் நிறுத்தப்பட... இந்திய நீதிமன்றங்கள் பாரபட்சம் இன்றி நீதி வழங்க... ஒன்றிய அரசு ஜனநாயக மரபுகளையும் அரசியல் சாசனத்தையும் மதித்து, அனைத்து தரப்பு மக்களின் நலனுக்காக பாரபட்சமின்றி செயல்பட...

3)தமிழ்நாட்டு மக்கள் இன - மத - மொழி பேதமின்றி ஒற்றுமையோடு நல்வாழ்வு வாழ... தமிழ்நாட்டில் தொழில்கள், வியாபாரம் செழிக்க... புயல், மழை, வெள்ள சேதங்களில் பாதுகாப்பு கிடைக்க... மத-வாத, பிரிவினை-வாத அரசியல் சக்திகள் கட்டுப்படுத்தப்பட...

4)திருமதி. சுந்தரிபாய் அவர்களின் முழு குடும்பமும் இரட்சிக்கப்பட...

5)திருமதி. ஷேரன் ஹெப்சிபா, திருமதி. சுமி ஜேஸ்மின், திருமதி. மெர்லின், திருமதி. பாக்கியா, திருமதி.திலகவதி மகேஷ், திருமதி. வைலட், திருமதி.சுதா, திருமதி. பிரியா சுதிர், திருமதி. புஷ்பாவதி, திருமதி. ஹனா விஜய் ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

6)பிரி-கே.ஜி முதல் பள்ளியிறுதி வரை கல்வி பயிலும் நம் பிள்ளைகளுக்கு நல்ல சுகம், பெலன் அருளப்பட... ஆஷெர், ஜெரிக், ஜெர்லின், பிரியங்கா, ஷாலோம், கிளாட்சன் ஆகிய நம் பிள்ளைகளுக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட...

7)பிளஸ்-1, முதல் பி.ஹெச்.டி வரை உயர்-கல்வி பயிலும் நம் பிள்ளைகள் பிரேம், ஷிஃபியா, ஷெரின் டேவிட், ஜாஸ்மின், சிப்ரா, ஜாஷ்வா மேத்யூ, வில்சன், ஜோயல், ஜெனிபர், சாம், சிந்தியா பிரகாஷ் ஆகியோருக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட...

8)திரு.சுந்தர்சிங், திரு.அப்பன் டேவிட், திருமதி.செல்வி, திரு.லவ்ஸ்லி ஞானதாஸ், திரு. ஜூலியன், திருமதி. ஜேஸ்மின் ஞானதாஸ், திரு.அசரியா ஞானதாஸ், பேபி. ஜாஃபியா, சகோ. நெல்சன், திரு.ஜெரி, திருமதி.லீலா டேவிட், திருமதி. ஷைனி ஜேம்ஸ், திரு.நெல்சன் (நகோமி), திரு.வெஸ்லி சாமுவேல் ஆகியோரின் சரீர சுகத்திற்காக...

9)திருமதி. ராஜேஷ்வரி, திருமதி. சுந்தரிபாய், திரு. ஜெபனேசர், திருமதி. ஐரீன் வாக்கர், திருமதி. ஞானம் ஜெபராஜ், திருமதி. ஞானம் ராஜசேகர், Dr.ஷீபா, திருமதி. ஐலீன் செல்லத்துரை, திருமதி. ரத்னாபாய் சாம், திருமதி. வசந்தா அன்பன், திருமதி. சுகிர்தா சின்னதுரை ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

10)நமது ஊழிய ஆதரவாளர்களான திரு. தி. ஜெயக்குமார், திருமதி. சுஜாதா சாமுவேல், திருமதி. த. தீபா மெர்ஸி கிறிஸ்டோபர், திருமதி. சுவர்ணலதா அற்புதராஜ், திருமதி. திருமதி. ரமோலா அதிசயராஜ், திரு. டேவிட் மனோகரன், திருமதி. ஸ்டெல்லா கனகராஜ், திருமதி. ஐரீன் வாக்கர் (கிரேஸ் திவ்யா), திருமதி. ராணி சாமுவேல்ராஜ், திரு.J.R.டேவிட், திருமதி. ஷைனி ஜேம்ஸ், திருமதி.அரோமா சாத்ராக், திரு.சாம்சன் ஆபிரகாம், திரு.S.J.P. ராஜா, திரு. அசரியா ஞானதாஸ், திருமதி. வனஜா ஹெர்பர்ட் ஆகியோருடைய குடும்பங்களுக்காக...

கிறிஸ்மஸ்: சிறப்பு தேவசெய்தி...



# கிறிஸ்மஸ் வந்துவிட்டது

## ஆனால் கிறிஸ்துவுக்கோ இடமில்லை

## THE MAGIC OF CHRISTMAS IS IN THE AIR; BUT, THERE IS NO ROOM FOR CHRIST

Rev. S.J.D. Dharmaraja

ஆண்டவரும் அருமை இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் உங்களை அனைவரையும் அன்போடு வாழ்த்துகிறேன். மீண்டுமாக ஒரு கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாட ஆண்டவர் நமக்குக் கிருபை தந்திருக்கிறார். 'கிறிஸ்மஸ் வந்துவிட்டது - ஆனால் கிறிஸ்துவுக்கோ இடம் இல்லை' என்ற கருத்தை மையமாகவைத்து வேதவசனங்களைத் தியானிக்க அழைக்கப்படுகிறோம்.

கடவுள் தம் திருமைந்தனை இவ்வுலகிற்கு அனுப்பி ஆயிற்று, கிறிஸ்துவானவர் மரியாளின் வயிற்றில் சிசுவாக உருவாகி ஆயிற்று, மரியாள் இயேசுவைப் பெற்றெடுக்க ஆயத்தமாகி விட்டார், பெத்லகேம் சிறுநகரம் இயேசுவின் பிறப்பை எதிர்பார்த்துக் காத்திருக்கிறது, கிறிஸ்மஸ் நட்சத்திரம் (யாக்கோபின் வெள்ளி) கிழக்கில் உதித்தாயிற்று, பரமசேனையின் திரள் இயேசுவின் பிறப்பை அறிவிக்க வானத்திலிருந்து இறங்கி ஆயிற்று; ஆனால், இயேசு பிறப்பதற்கோ பெத்லகேம் நகரில் எங்குமே இடமில்லை; சத்திரங்களில் இடமில்லை, யாருடைய இல்லங்களிலுமு; இடமில்லை. இயேசு பாலன் பிறப்பதற்கு கிடைத்த இடமோ, மாட்டுக்கொடடில் மாத்திரமே. 'கிறிஸ்மஸ் வந்தாயிற்று ஆனால் கிறிஸ்துவுக்கோ இடமில்லை' என்ற இந்த செய்தியை மத்தேயு, லூக்கா, யோவான் ஆகிய நற்செய்தி ஆசிரியர்கள் வெவ்வேறு வழிகளில் விளக்கிக் கூறுவதை நாம் வேதத்தில் காணமுடியும்.

**பாலகனாய் பிறந்தார் சத்திரத்தில் இடமில்லை: (லூக். 2:7)**

"மரியாள் தன் முதற்பேறான குமாரனைப் பெற்று, சத்திரத்திலே அவர்களுக்கு இடமில்லாத படியினால், பிள்ளையை துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தினாள்." என இயேசு பிறப்பதற்கு இடம் இல்லாத நிலை லூக்கா நற்செய்தி நூலில் சொல்லப்படுகிறது.

லூக்காவைப் பொறுத்தவரை, 'இடமில்லை' என்பது மனப்பூர்வமாக மறுப்பது அல்ல; மாறாக வேலைப்பளு, பரபரப்பு, கவனச்சிதறல் போற்றவற்றின் விளைவு. மக்கள் தொகை கணக் கெடுப்பில் பங்கேற்க வந்த ஏராளமான மக்கள் மத்தியில் யோசேப்பும் மரியாளும் விடுதி காப்பாளரின் பார்வையில், உலக அழுத்தங்கள் மற்றும் நெருக்கடிகள் நிறைந்த கண்ணுக்கு முக்கியமற்றவர்கள் ஆனார்கள்.

**மன்னனாய் பிறந்தார் மாநிலத்தில் இடமில்லை: (மத். 2:13-15)**

“கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் யோசேப்புக்குக் காணப்பட்டு: ஏரோது பிள்ளையைக் கொலைசெய்யத் தேடுகிறான்; ஆதலால் நீ பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்துக்கு ஓடிப்போய், அங்கே இரு என்றான். யோசேப்பு எழுந்து, இரவிலே பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு, எகிப்துக்கு புறப்பட்டுப்போய், ஏரோதின் மரணபரியந்தம் அங்கே இருந்தான்.”

மத்தேயுவின் கூற்றுப்படி, இயேசு பிறந்த உடனேயே, ஏரோது ராஜா அவரைக் கொல்லத் தேடுகிறான்; யோசேப்பு தனது இளம் குடும்பத்துடன் தப்பிச்செல்லும்படி ஒரு தூதனால் எச்சரிக்கப்பட்டு எகிப்துக்கு தப்பியோடுவதை இங்கே காண்கிறோம். இங்கு, கிறிஸ்து பிறந்து விட்டார் ஆனால் அவருக்கோ, யூதேயா மாநிலத்தில் எங்கும் இடமில்லை; மன்னனின் மனதிலும் மாளிகையிலும் இடமில்லை.

மத்தேயுவைப் பொறுத்தவரை, இயேசுவுக்கு இடம் மறுப்பது என்பது மிகவும் நேரடியான நிராகரிப்பு மற்றும் வெளியேற்றும் நோக்கத்திலிருந்து வருகிறது. காரணம், ஏரோது மன்னர், ஒரு புதிய ‘ராஜா’ பிறந்ததைக் கேள்விப்பட்டபோது அடைந்த அச்சத்தை வெளிப்படுத்துவதாக மத்.2:3 மற்றும் 16 அமைந்துள்ளது.

**ஒளியாய் வந்தார் உலகில் இடமில்லை: (யோவா.1:5,9,10 யோவா.3:19)**

“அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருள் அதைப் பற்றிக் கொள்ளவில்லை.

இயேசு உலகத்தில் இருந்தார்; ஆனால், உலகமோ அவரை அறியவில்லை. அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை.”

யோவானின் கூற்றுப்படி, மனிதரைப் பிரகாசிப்பிக்கிற மெய்யான ஒளியாக உலகிற்கு வந்துகொண்டிருந்த இயேசு உலகத்தில் இருந்தார்; ஆனாலும், உலகம் அவரை அறியவில்லை. அவர் தம் மக்களை நோக்கியே வந்தார், ஆனால், அவருடைய சொந்த மக்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. ஒளி வந்துவிட்டது, மக்கள் ஒளியைவிட இருளையே நேசித்தார்கள்.

இன்று கிறிஸ்மஸ் பண்டிகையை கொண்டாடுகிற நாம், கடவுளுக்கு நம் வாழ்வில் இடம் கொடுக்க விரும்புகிறோமா? இயேசு மனுஷகுமாரனாக நம் நடுவில் இருப்பதில் நமக்குத் தடையாக இருப்பது என்ன? நம் வாழ்வில் இயேசுவுக்கு ‘இடமில்லை’ என்பது வழக்கமான மற்றும் சமரசம் செய்யப்பட்ட சம்பிரதாயமாகவே மாறிவிட்டிருக்கிறது. நம்மை அறியாமலேயே இயேசுவுக்கான இடத்தை நாம் மறுத்துவருகிறோம். சுவிசேஷங்கள் ஒவ்வொன்றும் அதன் சொந்த வழியில், இத்தகைய மறுப்புக்கான பதில்களைக் குறிப்பிட்டுள்ளன. இவ்வாறாக, இயேசு இந்த உலகில் வரவேற்கப்படவில்லை; மாறாக, அவர் விடுதியில் இருந்தும், நகரத்தில் இருந்தும், நாட்டில் இருந்தும் வெளியேற்றப்பட்டார் என அறிகிறோம்.

சுவிசேஷங்கள் கூறும் இச்செய்திக்குள் நாம் நம்மையும் அடையாளம் காண முடியும். இன்று இயேசு, ஒரு குழந்தையாக நம்மிடையே வருகிறார்; நிராகரிப்பு, தவறான புரிதல், வன்முறை ஆகியவற்றின் நடுவில் அவர் நம்முடன் வாழ்கிறார். மேலும், அவரது வாழ்நாள் முழுவதும் இந்த உலகத்தின் வலிகள் மற்றும் பயங்கரங்களுக்கு மத்தியில் வாழ்வதற்கான சாட்சியாகவும் இருக்கிறார். இடம் கொடுக்கப்பட்டபோதும் மறுக்கப்பட்டபோதும், எப்போதும் அவர் நமக்குள் அன்புடன் மட்டுமே செயல்படுகிறார்.

இயேசுவின் இந்நிலை வேதனையானது. நம்மை மோசமாக காயப்படுத்திய ஒருவரை மன்னிக்க அல்லது அவர் மீதுள்ள வெறுப்பை விட்டுவிட நாம் எப்போதாவது முயன்றிருந்தால்; தீமைக்கு

தீமை செய்யாதிருப் பதை நாம் எப்போதாவது தேர்வு செய்திருந்தால்; நமது சுயகௌரவத்துக்கான வாய்ப்புகள் நமக்கு மறுக்கப்பட்டிருந்தால் கிறிஸ்து வானவருடைய அன்பின் வழி எவ்வளவு வேதனையானது என்பதையும், அந்த அன்பிற்கு நம்மை அர்ப்பணிப்பதில் நாம் எவ்வளவு குறைவுபடுகிறோம் என்பதையும் உணர்ந்து கொள்ள முடியும்.

இயேசுவுக்கு நம் வாழ்வில் இடமளிப்போம்; அவருடைய சீடர்களாய் மாற நம்மை அர்ப்பணிப்போம். இயேசுவின் சீடர்களாக இருப்பது என்பது, அவரை நம் வாழ்வில் அனுமதிப்பதும் அவர் நமக்கு வைத்துப்போன முன்மாதிரிப்படி நடப்பதுமேயாகும். இதனால் நாம் வெறுப்பதற்குப் பதிலாக, அன்பு செலுத்தும் கிருபையில் வளருகிறோம்; பிறரை பழி வாங்கவோ அல்லது நம்மைத் தற்காத்துக் கொள்ளவோ கட்டாயப்படுத்தப்படாமல், கிருபையில் வளர்கிறோம்.

கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடுகிற நாம், கிறிஸ்துவுக்கு நம் இதயங்களில் இடமளித்து, அவரது அன்பின்-வழி நடக்க நம்மை அர்ப்பணம் செய்வோமானால், நம் வாழ்வும் இவ்வுலக மக்களுக்கான அன்பின் பரிசாக மாறும்.

தாமஸ் மெர்டன் என்ற அறிஞர் இயேசுவின் பிறப்பு குறித்து: “இடமே இல்லாத பாவம் நிறைந்த இவ்வுலகிற்குள், இடம் இல்லாத பைத்தியக்கார சத்திரத்திற்குள், அனுமதி மறுக்கப்பட்ட நம் வாழ்விற்குள், கல்லாய் மாறின நம் இதயத்துக்குள் இரட்சகர் இயேசு இன்று அழையா விருந்தாளியாக வருகிறார்.” என சொல்கிறார். கிறிஸ்மஸ் வந்துவிட்டது, கிறிஸ்து வந்து விட்டார், இயேசு பிறந்துவிட்டார், நாம் கொடுக்கும் எந்த இடத்தையும் அவர் ஏற்று, தமக்கான அன்பின் மாளிகையாக அதை மாற்றுவார். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

---

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஆயர் மற்றும் உழிய இயக்குநர்,
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு, சாலிகிராமம், சென்னை. தமிழ்நாடு, தென்னிந்தியா

==============================================================================

**நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள் - Good Tidings Bible-Prints Ministries**

# ‘நல்ல விதைகள்’ சுவிசேஷ கைப்பிரதிகள்

‘GOOD SEEDS’ GOSPEL TRACTS

சுவிசேஷ ஊழிய பயன்பாட்டுக்காக நற்செய்தி கைப்பிரதிகளை வெளியிட்டு அவற்றை கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு விநியோகம் செய்துவருகிறோம். மட்டுமல்ல நற்செய்தி பணி செய்வோருக்கு கைபிரதிகளை இலவசமாய் வழங்கி வருகிறோம். ஒரு-வகை கைப்பிரதி வெளியிட ஆகும் செலவு ரூ.3500/- மட்டும். கைப்பிரதிகளை SPONSOR செய்து அனைத்து மக்களும் இயேசுவை அறிந்திட உதவுங்கள். SPONSOR செய்ய விரும்பும் அன்பர்கள் நமது ஊழிய இயக்குநரை தொடர்புகொள்ளுங்கள். கைப்பிரதிகளை SPONSOR செய்த தேவபிள்ளை களுக்கு எங்கள் நன்றி. எமது கைப்பிரதிகளை இலவசமாகப் பெற்று உங்கள் ஊழியங்களில் பயன்படுத்த அன்புடன் அழைக்கிறோம். ஆமேன்.

---

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழிய இயக்குநர்
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு, சாலிகிராமம், சென்னை-93. தென்னிந்தியா

.==============================================================================

வேத ஆராய்ச்சி ....

# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்



சங்கீதம்-103 டிசம்பர் 2025 எப்பிசோடு-103

AUTHOR: Rev. Dr. D. SURESH RAJAN

முன்னுரை:

தமிழ் கிறிஸ்தவ உலகில் இந்த சங்கீதத்தின் முதல் இரண்டு வசனங்களை மனனமாய் தெரியாதவர்கள் இருக்க முடியாது. ஒவ்வொரு பிரார்த்தனைக்கு பின்பும் இந்த வசனங்களை நாம் சொல்லி இறைவனுக்கு நன்றி செலுத்துகிறோம்.

பொதுவாக வருடத்தின் இறுதிநாட்களில் நமது திருச்சபைகளில் அதிகமாக வியாக்கியானம் செய்யப்படும் வேதப் பகுதிகளில் இந்தத் திருப்பாடலும் ஒன்று. சங்கீதக்காரர் தன் வாழ்வில் ஏற்பட்ட அனைத்து நிகழ்வுகளையும் ஒன்று திரட்டி கடவுளுடைய இரக்கத்தையும் கிருபை யையும் நினைவுகூர்ந்து அவருக்கு நன்றி செலுத்தும் பாடலாகவும்; மட்டுமல்லாமல், வாழ்வின் தேவைகளுக்கு அவர் மாத்திரமே போதுமானவர் என்பதை நமக்கு வலியுறுத்தும் ஒரு பாடலாகவும் இச்சங்கீதம் அமைந்துள்ளது.

இந்த திருப்பாடலில் தாவீது மன்னர் நமக்கு ஒரு வலுவான அறிவுரையைத் தருகிறார்: “அவருடைய கனிவான செயல்கள் அனைத்தையும் மறவாதே!” ‘அவர் செய்த நன்மைகளை மறவாதே’ என்பதே அந்த அறிவுரை.

நம் வாழ்வில், இறைவன் செய்த நன்மைகளை நினைவில் கொண்டு நன்றி செலுத்துவதைக் காட்டிலும், நாம் ஜெபித்தும், நமக்கு கிடைக்காத விடயங்களையே பெரிதுபடுத்தி, நம் மீது இறைவன் கொண்டிருக்கிற அக்கறையை மறந்தவர்களாய், அதையே நினைத்து மனம் குமுறு கிறோம். ஆனால், நம்மைச் சூழ்ந்துள்ள அவரது கனிவான செயல்கள், உயிர்-மூச்சு, உணவு, குடும்பம், தேவையின்போது கிடைத்த உதவி, ஆகியவற்றையெல்லாம் மறந்துவிடுகிறோம்.

நன்றியின்மை என்பது ஆவிக்குரிய மறதி நோய். இந்த நோய் நம்மை ஆண்டவரிடமிருந்து பிரிக்கிறது. அதனால்தான் தாவீது, தன் ஆத்துமாவை நோக்கி, ‘மறவாதே!’ என்று இரண்டு முறை சொல்கிறார்.

**1. ஆண்டவர் நமக்குச் செய்த நன்மைகளை மறக்கக்கூடாது:**

ஆண்டவர் நமக்கு செய்த மிகப்பெரிய நன்மை அவர் அருளும் பாவமன்னிப்பு. நாம் செய்த தவறுகள், பாவங்கள் அனைத்தையும் சிலுவையில் தாம் சிந்திய இரத்தத்தின் வழியாய் நீக்கியிருக்கிறார். அவர் நமது பாவங்கள், குற்றங்கள், மீறுதல்கள் அனைத்தையும் மன்னித்திருக்கிறார்.

அவர் நம் நோய்களை குணமாக்கியிருக்கிறார். உடல் நோய்களை மட்டுமல்ல, மனதின் காயங்களை, உள்ளத்தின் வெடிப்புகளைக் குணமாக்கியிருக்கிறார்.

அவர் நமது உயிரைப் (ஆத்துமாவை) படுகுழியினின்று மீட்டிருக்கிறார். பிசாசின் தந்திரத்தில் சிக்கி நரகமாகிய குழியில் விழுந்துவிடாதபடி, நம்மை மீட்டு, நித்திய ஜீவ வாழ்விற்கு உட்படுத்தியுள்ளார்.

ஆகவே, ஆண்டவர் செய்த நன்மைகள் யாவற்றையும் நாம் மறக்கக்கூடாது. மறக்கும் பட்சத்தில், நம் வாழ்வில் போற்றுதலுக்குப் பதில் புகார்தான் மேலோங்கி நிற்கும். நன்றி உணர்வுக்குப் பதிலாக முறுமுறுத்தல் உண்டாகும்.

**2. நம் இயல்பை மறக்கக்கூடாது:**

“நாம் தூசி என்பது அவர் நினைவிலுள்ளது” (வச.14) நம் வாழ்நாள் புல்லைப் போன்றது, நாளைக்கே வாடிவிடும். ஆனால் இந்தப் புழுதியான மனிதன்மீது ஆண்டவர் எத்தகைய அன்பைக் கொண்டுள்ளார்! பாருங்கள்; “மேற்கினின்று கிழக்கு எத்துணைத் தொலைவிலுள்ளதோ, அத்துணைத் தொலைவிற்கு நம் குற்றங்களை நம்மிடமிருந்து அவர் அகற்றுகின்றார்.” (வச.12). நமது பாவம் எவ்வளவு அதிகமான தூரத்திற்கு அகற்றப்பட்டிருக்கிறது! இதை மறந்துவிட்டால், நமது ஊழியம் அகந்தையாக மாறும். ஆக, ஆண்டவரின்றி நாம் எத்தகைய தகுதியுமற்ற, அழிந்துபோகும் மானுடர்கள் என்பதை மறந்துவிடக்கூடாது.

**3. ஆண்டவரின் குணாதிசயத்தை மறக்கக்கூடாது:**

“ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர்; நீடிய பொறுமையும் பேரன்பும் உள்ளவர்.” (வச.8). அவர் எப்போதும் கோபப்படுபவரல்லர். நம் குழந்தைகள் நம்மை எத்தனை முறை காயப் படுத்தினாலும், நாம் அவர்களை நிராகரிப்பது இல்லை. அதைவிடப் பல மடங்கு அன்புள்ள நம் ஆண்டவர், “தந்தை தம் பிள்ளைகள்மீது இரக்கம் காட்டுவதுபோல்” (வச.13) நம்மீது இரக்கம் காட்டுகிறார். ஆக, அவரது குணம், ஆயிரம் வழிமரபினருக்கு அன்பு பாராட்டும் குணதிசயம் என்பதை நாம் மறந்துபோகக்கூடாது.

**முடிவுரை:**

அன்பான விசுவாசிகளே! நமது ஆத்துமா இறைவனைப் போற்றும் போற்றுதலில் ஈடுபட வேண்டுமானால், நாம் யார்? என்பதையும், ஆண்டவர் யார்? என்பதையும், ஆண்டவர் நமக்குச் செய்த நன்மைகள் என்ன? என்பதையும், மறந்துபோகக் கூடாது. இந்த மூன்று விடயங்களும் நமது வாழ்வையே ஒரு நித்தியமான போற்றுதலின் பாடலாக மாற்றும். வாழ்வின் ஒவ்வொரு நாளிலும், “என் ஆத்துமமே, ஆண்டவரைப் போற்றிடு!” என்று சொல்லுவோம். விண் தூதர்கள், படைகள் மற்றும் இறைவனுடைய கரத்தின் படைப்புகள் அனைத்தும் இறைவனைப் போற்றும் போற்றலில் ஈடுபடுகின்றன. அவரது மிகச் சிறந்த நன்மைகளைப் பெற்றுக்கொண்டிருக்கிற அவருடைய பிள்ளைகளாகிய நாம் மட்டும் மௌனமாக இருப்பதா? கூடாதே!

ஆகவே, நாமும் அவரை போற்றுவோம், புகழுவோம், அல்லேலூயா! ஆமென்.

சங்கீதங்கள் கற்றுத்தரும்விலையேறப்பெற்ற சத்தியங்கள். தொடரும்......

ஆசிரியர்: அருட்திரு. அறிவர். டி. சுரேஷ் ராஜன், தலைவர் (இந்திய மறை மாநாடு), குளோபல் மெத்தடிஸ்ட் திருச்சபை.

AUTHOR: REV. DR. D. SURESH RAJAN, CONFERENCE SECRETARY, INDIA ANNUAL CONFERENCE, GLOBAL METHODIST CHURCH IN INDIA.

================================================================

# வேதாகம போட்டி-181 (நவம்பர் போட்டிகள்)

## சரியான பதிலளித்தோர்

1) அமிர்தகனி பொன்ராஜ் (சென்)
2) ஏஞ்சல் C. (திலி)
3) ஏஞ்சல் டார்வின் (கன்)
4) ஏஞ்சல் ராஜதுரை (சென்)
5) ஏஞ்சலின் யோசபாத் ராஜா (சென்)
6) ஏஞ்சலின் ரூஸ்வெல்ட் (சென்)
7) ஏஞ்சலின் வில்லியம்ஸ் (சென்)
8) அன்னாள் ஜெபக்கனி (கோய)
9) அனி பாய் ஜாண் (திலி)
10) அரோமா சாத்ராக் (திலி)
11) அருள்செல்வி ஜாண்ஸன் (திலி)
12) பெல்சி தங்கராஜ் (சென்)
13) பெனிட்டா பிராங்க்ளின் Dr. (சென்)
14) பிரிஸ்கில்லாள் பொன்ராஜ் (தென்)
15) பியூலா அலெக்சாண்டர் (சென்)
16) பியூலா ஜேசுராஜன் (பாண்)
17) பியூலா ராஜசெல்வன் (கோய)
18) செலினா பென்சி வில்சன் Dr. (குவை)
19) செலினா வின்சென்ட் (திலி)
20) சந்திராபாய் மாசிலாமணி (சென்)
21) சந்திரலேகா (ஆபி)
22) சந்திரா மேரி விஜயன் (பெங்)
23) சந்திரா சாமுவேல் (திலி)
24) சார்லஸ் ஃபின்னி Dr.. (சென்)
25) சார்லஸ் சாலமோன் Wg.Comr. IAF (புனே)
26) சார்லட் டேவிட் (சென்)
27) சித்ரா பெஞ்சமின் (திளு)
28) கிறிஸ்டல் ஜாய் யோபு (திதூ)
29) கிறிஸ்துதாஸ் (ஈரோ)
30) கிறிஸ்டி ஞானராஜ் (சென்)
31) கிறிஸ்டி ஜேம்ஸ் (மாய)
32) கிறிஸ்டி மெர்சி ராஜ்குமார்(தூத்)
33) கிறிஸ்டி பொன்னுசாமி (மது)
34) சிசிலி புஷ்பம் டேவிட் (சென்)
35) டெய்ஸி பில்பா (மும்)
36) டெய்ஸி ஜெபதாஸ் (திசி)
37) டெய்ஸி சாம் (கன்)
38) டேனியல் தாமஸ் (திலி)
39) டேனிங் சொர்ணா ஜெஸ் (சென்)
40) டேவிட் J.R. (சென்ஃகோய)
41) தெபோராள் D. (சென்)
42) தேவபொன்மலர் ஜோனத்தான் (சென்)
43) தேவநேசம் ராஜாசிங் (சென்)
44) டோராபாய் (சென்)
45) தீபா மெர்சி கிறிஸ்டோபர்(சென்)
46) தேவகனி எமிலிசன் (சென்)
47) தேவகிருபை முத்து சகரியா (பாண்;)
48) எபெனேசர் கிரேஸ்லின் சாந்தி (திலி)
49) எலிசபெத் அலெக்ஸாண்டர் (சென்)
50) எலிசபெத் செல்லத்துரை (சென்)
51) எமிமாள் மில்டன் (சென்)
52) எப்சிபா ஜாண் (ராணி)
53) எஸ்தர் D.R. (திலி)
54) எவாஞ்சலின் ஜோன்ஸ் Dr. (சேல)
55) கெத்ஸி தம்புராஜ் (பெங்)
56) குளோரி ரவீந்திரன் (திலி)
57) ஞானஜோதி பேரின்பம் (விரு)
58) ஞானம் ஜெபராஜ் (திலி)
59) ஞானம் பிலிப் (கோய)
60) ஞானராணி G. (சென்)
61) ஞானரோஸ் G. (திளு)
62) ஞானசெல்வி மோசஸ் (அமெ)
63) கோல்டா ஜேசுபாதம் (மும்)
64) கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் (சென்)
65) கிரேஸி கிறிஸ்டோபர் (சென்)
66) கிரேனா அன்புரோஸ் (சென்)
67) கிரேஸியா ஜெயபால் (சென்)
68) கிரிசெல்டா செய்லர் (சென்)

69) ஹெலென் ஜான்சிராணி (திலி)
70) ஹெலென் ஜெனிபர் பாண்டியன் (சென்)
71) ஹெலென் I. (திளு)
72) ஹெலன் திலக் (தூத்)
73) ஹேமா அஜீத் (சென்)
74) ஹேமா கேப்ரியேல் (பெங்)
75) ஹெப்சி அசரியா (பாண்)
76) ஹிம்லா ராஜகுமாரி (சென்)
77) இளவரசி ஜோபிதா சுந்தரராஜன்(கோய)
78) இந்திரா கெத்ஸி டேவிட் (திலி)
79) இன்பவல்லி கலைச்செல்வன் (மது)
80) ஜமீலா செல்வராஜ் (சென்)
81) ஜமுனா K. (சென்)
82) ஜானகி டேனியல் (திலி)
83) ஜேன்ஸ் (ஜான்ஸி) (கோய)
84) ஜேன் தர்மராஜ் (திலி)
85) ஜான்ஸி சந்தியா (திலி)
86) ஜாஸ்மின் ஞானதாஸ் (சென்)
87) ஜாஸ்மின் ஜீவன் டேவிட் (மது)
88) ஜெப கோல்டா (திலி)
89) ஜெபா ஜெயராஜ் (சென்)
90) ஜெபக்குட்டி மோசஸ் (திலி)
91) ஜெபரஞ்சிதம் மெர்லின் (தூத்)
92) ஜெபசீலி கிளின்டன் (சென்)
93) ஜெபா சீனி (திலி)
94) ஜீவா டேவிட் சாலோமோன் (தென்)
95) ஜெமீலா நிக்ஸன் (சென்)
96) ஜெனிலா (சென்)
97) ஜென்ஸி ஞானேஷ் (மும்)
98) ஜெரின் ஸ்டீபன் (மும்)
99) ஜெஸி ஜெயக்குமார் (திலி)
100) ஜெஸிதா அகஸ்டின் (ஆபி)
101) ஜெயா ஆல்பர்ட் (தஞ்)
102) ஜோனா ஸ்டீபன் (சென்)
103) ஜாய் ராபின்சன் (மது)
104) ஜாய்ஸ் பாண்டியன் (சென்)
105) ஜூலியட் அசோக் குமார் (தூத்)
106) ஜூலியட் ஜெயக்குமார் (திலி)
107) ஜஸ்டினா ஜெபராணி ராஜீவ் (அரி)
108) கலா கிருபாகரன் (திலி)
109) கலையரசி செல்வராஜ் (சென்)
110) கஸ்தூரி எலியாஸ் (திலி)
111) கிருபாவதி S. (சென்)
112) கோயில்பிள்ளை ஞானதாய் (தென்)
113) லதா மைகேல்ராஜ் (சென்)
114) லீலா டேவிட் (சென்)
115) லீலா ஜோஸப் (கோய)
116) லில்லி ஜாண்ஸன் (சென்)
117) லிஸி டென்சிங் (திலி)
118) லோவிசாள் ராஜேந்திரன் (தென்)
119) மல்லிகா ஜெபராஜ் (தூத்)
120) மல்லிகா V. (சென்)
121) மரிய பாப்பா (சென்)
122) மரியாள் J.S (தூத்)
123) மேபா ஞான சுகி (கன்)
124) மேபல் கிறிஸ்டியன் (சென்)
125) மெஜிலா ஜோஷ்வா (தூத்)
126) மெர்சி ஃபுளோரா பாஸ்கரன் (வேலூ)
127) மெர்லின் சாமுவேல் (சென்)
128) மெரிட்டா ஜெயபாலன் (திசி)
129) மில்காள் சாம் (சென்)
130) முத்துமாலினி அலீஸ் (கோய)
131) நேச மாலா பீட்டர் (திலி)
132) நிக்ஸன் எவர்பிரைட் (திலி)
133) ஆலிவ் ஜெயபாலன் (கோய)
134) ஓலிவியா லேங்டன் (திசி)
135) பாக்யபாய் ஆரோன் (திலி)
136) பமீலா எட்வின் (கன்)
137) பெர்சி பால் பொன்சிங் (தூத்)
138) பிங்க்லின் சந்தோஷ் (சென்)
139) பொன்மணி உத்தமசிங் (சென்)
140) பிரேமா ஸ்டாலின் (சென்)
141) பிரேம்குமாரி ஜெய்சிங் (சென்)
142) பிரின்ஸ் தயாநிதி (சென்)

143) பிரிசில்லா சந்திரதாஸ் (சென்)
144) பிரிஸ்கில்லாள் சசி (கோய)
145) பிரியா ராஜ்குமார் (சென்)
146) ரேச்சல் ஈஸ்டர் (வேலூ)
147) ரேச்சல் கனகராஜ் (கோய)
148) ராஜபிரமீளா (திதூ)
149) ராஜ்மேரி சார்லஸ் (கேர)
150) ரமோலா அதிசயராஜ் (திலி)
151) ராணி பிரபாகர் (திலி)
152) ராணி சாமுவேல்ராஜ் (சென்)
153) ரத்னா டென்னிஸன் (சவு)
154) ரத்னாவதி பாண்டியன் (சென்)
155) ரியஸ்ஸி ஜாண்சிங் (கோய)
156) ரூபவதி நோபிள் (திலி)
157) ரூத் HAPP (திசி)
158) ரூத் ஜாண்ஸன் (திலி)
159) ரூத் நரேஷ் (சென்)
160) சலோமி மனோகர் Dr. (சென்)
161) சம்பு ஜெயச்சந்திரன் (மது)
162) சாரா பாலசிங் (மது)
163) சரோஜா செல்வராஜ் (சென்)
164) சரோஜினி எலிசபெத் (சென்)
165) செல்வ அமுதா ஜார்ஜ் (சென்)
166) செல்வ பென்சி ஆபேல் (ராணி)
167) செல்வராஜ் K. (கோய)
168) செல்வராணி ஆல்பர்ட் (சென்)
169) செல்வி அமிர்தராஜ் (திளு)
170) செல்வின் S. (தூத்)
171) செல்வின் துரை பாஸ்டர் (மஹா)
172) ஷாலி எடிசன் (சென்)
173) சாமுவேல் S. (கோய)
174) சாந்தி ஆல்பர்ட் (தென்)
175) சாந்தி ஜெயசீலன் (சென்)
176) சாந்தி ரோஸ் (கோய)
177) சாந்தி சேகர் (மது)
178) ஷர்மீளா செல்வராஜ் (கட)
179) ஷீலா G. (செங்)
180) ஷீலா இஸ்ரேல் (திசி)
181) ஷெரீன் ஜெபராஜ் (திளு)
182) சில்வியா ஃபின்னி Dr. (சென்)
183) சவுந்தரம் சாலமோன் (சென்)
184) ஸ்டெல்லா டேவிட் (தூத்)
185) ஸ்டெல்லா கனகராஜ் (சென்)
186) சுகந்தி ஜெயச்சந்திரன் (கோய)
187) சுகிர்தா சின்னதுரை (திலி)
188) சுஜாதா சாமுவேல் (சென்)
189) சுரேஷ் பாபு (கோய)
190) சுசீலா தியோடர் (திசி)
191) சுவர்ணலதா அற்புதராஜ் (சென்)
192) தனசீலி ஞானராஜ் (சென்)
193) தெல்மா ஸ்டேன்லி (மது)
194) உமா குளோரி (சென்)
195) உஷா ஜெபராணி SIS. H. (திளு)
196) வசந்தா அன்பன் (திலி)
197) வசந்தா சந்திரசேகர் (கோய)
198) வசந்தா துரைராஜ் (ஓஎப்டி)(திசி)
199) வசந்தா சேகர் (சென்)
200) வசந்தி கருணாகரன் (சென்)
201) வசந்தி வாசன் (சென்)
202) விஜயராணி A. (சென்)
203) விஜி டேனியல் (செங்)
204) விமலா ஜெயக்குமார் (தூத்)
205) விண்ணரசி ரோஸ் (சென்)
206) வினோலியா ஜேம்ஸ் (தூத்)
207) வினோலியா பால் (மது)
208) வினோலியா வில்சன் (திதூ)
209) வைலட் கிறிஸ்டோபர் (திலி)
210) வைலட் சைரஸ் (திலி)

## வேதாகம போட்டி-181 சரியான விடைகள் (2 நாளாகமம்)

1. யோயாக்கீன் 2நாளா. 36:9
2. ரெக்கொபெயாம் 2நாளா. 10:6-8, 13
3. யோசபாத் 2நாளா. 17:12
4. இத்தோவின் சரித்திரம் 2நாளா. 13:22
5. ஆசா 2நாளா.16:12
6. யாகீன், போவாஸ் 2நாளா. 3:15, 17
7. ராமாவின் கற்கள் 2நாளா. 16:6
8. ராஜாவின் வர்த்தகர் 2நாளா.1:16
9. சரி - 2நாளா. 19:11
10. சரி - 2நாளா. 15:7
11. சரி - 2நாளா. 35:25
12. தவறு - 2நாளா. 3:13
13. இ - தந்தம் 2நாளா. 9:17
14. ஈ - ஆலோசனைக்காரி 2நாளா. 22:3
15. அ - ஆசா 2நாளா. 14:1
16. ஆ - நகரம் 2நாளா. 23:21
17. கர்த்தரிடத்தில் 2நாளா. 19:7
18. யோராம், கர்த்தர் 2நாளா. 21:16
19. உசியா 2நாளா. 26:16-21
20. இஸ்ரவேலில் 2நாளா. 15:3-5

================================================================================

# ‘அனைவரும் ஊழியத்தில்’

### ஒவ்வொருவரும் 30-கைப்பிரதிகளை விநியோகிக்கும் திட்டம்

### இத்திட்டத்தின் செயல்முறை பின்வருமாறு

1. **இத்திட்டத்தில் பங்குபெறுவோர்:** இரட்சிப்பு பத்திரிக்கையின் சந்தாதாரர்கள், நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழிய் ஆதரவாளர்கள், வேதாகம போட்டியின் பங்காளர்கள், ஜெப-ஜன்னல் ஜெப பங்காளர்கள் ஆகிய அனைவரும்.

**2.நாங்கள் செய்வது:** மேற்கண்ட நமது ஊழிய ஆதரவாளர்களான உங்கள் அனைவருக்கும் வருடம் ஒருமுறை 30-கைப்பிரதிகளை அனுப்பிவைப்போம். ஒவ்வொரு காலண்டர் மாதத்திலும் தெரிந்தெடுக்கப்பட்ட 30 அன்பர்களுக்கு தபால் மூலம் கைப்பிரதிகள் அனுப்பிவைக்கப்படும்.

**3. நீங்கள் செய்யவேண்டியது:** நீங்கள் வீட்டிலிருந்தவாறே உங்கள் அண்டைவீட்டார், காய்கறி விற்போர், பால் போடுவோர், எலக்ட்ரீஷியன், பிளம்பர், கார்பென்டர், டிரைவர், தூய்மை பணியாளர், வீட்டு-வேலைசெய்வோர், சமையல் எரிவாயு வெண்டர், தபால்க்காரர்கள், மெக்கானிக்குகள் ஆகியோரில் இயேசுவை அறியாதவர்களுக்கு ஜெபத்துடன் கைப்பிரதிகளை வழங்க வேண்டும். இத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு நல்கி நற்செய்தி பரவிட உதவுங்கள்.

**பின்-குறிப்பு:** இத்திட்டத்தில் பங்குபெற இயலாத நிலையில் இருப்பவர்கள் உங்கள் இயலாமையை வாட்ஸ்அப் மெஸேஜ் வாயிலாக எங்களுக்கு தெரியப்படுத்தலாம். எங்கள் வாட்ஸ்-அப் எண்: 9789914463.

---

அருட்திரு. தர்மராஜா, ஊழிய இயக்குநர், இரட்சிப்பு ஊழியங்கள், சென்னை-93, தென்னிந்தியா

================================================================================

# வேதாகம போட்டி-182

## வேத-பகுதி: எஸ்றா புத்தகம் புத்தகம்

படைப்பாசிரியர்: அருட்திரு.எஸ்ஜேடி. தர்மராஜா

**வேதவசன இருப்பிடத்துடன் பதிலளிக்கவேண்டும். கடைசி நாள்: 25-12-2025**

1. லேவியின் குமாரனாகிய மகேலியின் புத்திரரில் புத்தியுள்ள மனுஷன் யார்?
2. தரியு அரசாண்ட 6ம் வருஷம் ஆதார் மாதம் 3ம் தேதி நடந்தது என்ன?
3. பாபிலோன் கஜானாவின் தஸ்திர-அறையை சோதிக்க கட்டளையிட்டது யார்?
4. இத்தோவின் குமாரனாகிய தீர்க்கததரிசியின் பெயர் என்ன?
5. எருசலேமுக்கு விரோதமாய் அர்த்தசஷ்டா ராஜாவுக்கு மனு எழுதியது யார்?
6. கர்த்தரின் ஆலய வேலையை நடத்த வைக்கப்பட்ட லேவியரின் வயது என்ன?
7. பூமியின் ராஜ்யங்களை தமக்கு யார் தந்ததாக கோரேஸ் ராஜா சொல்கிறார்?
8. 'பெர்சிய ராஜாவான தரியுவின் 2ம் வருஷமட்டும் நிறுத்தப்பட்டிருந்தது' எது?
9. 'எருசலேமில் வாசம்பண்ணுகிற தேவனே தேவன்' - **சரியா தவறா**?
10. 'எருசலேமில் வல்லமையுள்ள ராஜாக்கள் பிறந்தார்கள்' **சரியா தவறா**?
11. 'அகமேதா பட்டணத்தின் அலங்கத்திலே ஒரு சுருள் அகப்பட்டது' - **சரியா தவறா**?
12. 'இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, நீர் நீதியுள்ளவர்' - **சரியா தவறா**?
13. பொன்னைப்போல எண்ணப்பட்ட 2-நல்ல '**இவற்றை**' நிறுத்துகொடுத்த எஸ்றா:

அ) வெள்ளி-தூண் ஆ) வெண்கல-பாத்திரம் இ) தூப-கரண்டி ஈ) வெண்கல-தகடு

14. பெர்சியா ராஜாவான கோரேசின் 1ம் வருடத்தில் கர்த்தர் '**இதை**' ஏவினார்:

அ) தூய ஆவியை ஆ) சாத்தானை இ) ஏவல் ஆவியை ஈ) கோரேசின் ஆவியை

15. இஸ்ரவேலர் எல்லாரும் தங்கள்-தங்கள் '**இவைகளில்**' குடியேறினார்கள்:

அ) வீடுகளில் ஆ) பாளையத்தில் இ) கூடாரங்களில் ஈ) பட்டணங்களில்

16. நான் '**இதை**' என் தேவனாகிய உமக்கு முன் ஏறெடுக்க வெட்கி கலங்குகிறேன்:

அ) என் கரத்தை ஆ) என் முகத்தை இ) என் கண்களை ஈ) என் பலியை

17. கொள்ளையடித்த கோவில் சொத்தை, திருப்பித் தந்தான்!
கொத்துகொத்தாய் தங்கம்-வெள்ளி, எண்ணித் தந்தான்!
கலெக்ஷன்செய்த பொருட்களை, அனுப்பித் தந்தான்! **யார்? இவன் யார்?**

18. கொண்டாட்டம், கொண்டாட்டம், கோலாகலக் கொண்டாட்டம்!
ஆடு-அடித்து கொண்டாட்டம், ஆலயத்தின் கொண்டாட்டம்!
மாடு-அடித்து கொண்டாட்டம், மகிழ்ச்சியின் கொண்டாட்டம்! **இது என்ன?**

19. முயன்று, முயன்று முடிந்த வேலை! மூன்றாம் தேதி முடிந்த வேலை!
மூவொரு தேவன் ஆணையிட்ட வேலை! மூன்றரசர் ஆணையிட்ட வேலை!
**என்ன வேலை இது? மூன்றரசர் யார்?**

20. அஸ்திபாரம் போடுமுன், ஆண்டவருக்கு பலி-பலி! அந்தி-சந்தி நேரங்களில், அன்றாடமும்
பலி-பலி! மாதப்பிறப்பு பண்டிகைகளில், மறவாமல் பலி-பலி! தூய-திரு பண்டிகைகளில்,
துதிகளுடன் பலி-பலி! **எங்கே? இது எங்கே?**

---

பதில் அனுப்பவேண்டிய முகவரி: திருமதி.ஜெயசீலி தர்மராஜா, எஃப்-1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ்,
எண்: 4/2-A பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை-93. வாட்ஸ்-அப்: 9789914463

=====================================================================================

## கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்

பாகம்-79 டிசம்பர் 2025 எப்பிசோடு-79

# ஆதியும் அந்தமும் ஆனவர்

**THE ONE WHO IS**

**THE BEGINNING AND THE END**

aftos pou einai

protos kai eschatos

**ஆஃப்டோஸ் போவ் ஈனாய் புரோடோஸ் காய் எஸ்கட்டோஸ்**



**சகோ. சி. ஏஞ்சல்**

நான் அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன். வெளி.22:13

I am Alpha and Omega, the beginning, and the end, the first and the last. Rev. 22:13

உலகத் தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டவராயிருந்து, தமது மூலமாய் தேவன்மேல் விசுவாசமாயிருக்கிற தேவபிள்ளைகளுக்காக இந்த கடைசி காலங்களில் வெளிப்பட்ட இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள்.

**சங்.68:33** ஆதிமுதலாய் வானாதி வானங்கள்மேல், எழுந்தருளியிருக்கிறவரைப் பாடுங்கள்.

**ஆதி.1:1** ஆதியிலே வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்து மனுஷனை உண்டாக்கினவர், தாம் படைத்த மனுஷனை நரகத்தின் பிடியிலிருந்து மீட்டெடுக்க மனுஷகுமாரனாக பூமியிலே பிறந்திருக்கிறார்; அவரை மனதாரப் போற்றுவோம்.

**நீதி.8:23** தாம் யார் என்பதையும், அவர் நமக்காக வைத்திருக்கிற தேவ பணியையும், வரப்போகிற காரியங்களையும் வெளிப்படுத்துகிறார், அல்லேலூயா!.

**நீதி.8:31,32** பூமி உண்டாகுமுன்னும் ஆதிமுதற்கொண்டும் அனாதியாய் நான் அபிஷேகம் பண்ணப்பட்டேன். அவருடைய பூவுலகில் சந்தோஷப்பட்டு மனு மக்களுடனே மகிழ்ந்து கொண்டிருந்தேன். ஆதலால், பிள்ளைகளே எனக்குச் செவிகொடுங்கள். என் வழிகளைக் காத்து நடக்கிறவர்கள் பாக்கியவான்கள்.

**ஏசா.48:16,20** நான் ஆதிமுதற்கொண்டு அந்தரங்கத்தில் பேசவில்லை.

**அறிவுரை:** பாபிலோனிலிருந்து புறப்படுங்கள், கல்தேயரைவிட்டு ஓடிவாருங்கள். கர்த்தர் தமது தாசர்களாம் பிள்ளைகளை மீட்டுக்கொண்டாரென்று சொல்லுங்கள்.

**ஏசா.48:6** இதுமுதல் புதியவைகளானவைகளையும், மறைபொருளானவைகளை யும் உனக்குத் தெரிவிக்கிறேன்.

**ஜெபம்:** சீயோனில் இரட்சிப்பையும், இஸ்ரவேலுக்கு மகிமையையும் கட்டளையிடுவேன் என்றவரே உம்மைத் துதிக்கிறோம். உமது பரிபூரணத்தினால் கிருபை மேல் கிருபை அருளி, கிருபையையும் சத்தியத்தையும் எங்கள் வாழ்வின் அஸ்திபாரங்கள் ஆக்கிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஸ்தோத்தரிக்கிறோம். அல்லேலூயா. ஆமென்.

---

**தொகுப்பு: சகோ. சி. ஏஞ்சல் B.SC திருநெல்வேலி, தென்னிந்தியா**

==========================================================================



## தேன்-துளி வேத வசனக் கதைகள்

(கதை-175 டிசம்பர் 2025)

# சிறுமைப்பட்டோருக்குச் செய்யும் உதவி எனக்கே செய்தீர்கள்

சகோ. எம். அசரியா ஞானதாஸ் எம்.ஏ; எம்.எட்

...

பின்லாந்து தேசத்தில BROWNY என்ற தேவமனிதர் தன் மனைவி மற்றும் 2 பெண் பிள்ளைகளுடன் வாழ்ந்துவந்தார். BROWNY ஒரு பன்னாட்டு நிறுவனத்தில் மேனேஜராக பணிபுரிந்தார். குடும்பத்துடன் ஆலய ஆராதனைகளில் பங்கு பெறுவது, பிள்ளைகளை 'சண்டே ஸ்கூல்' 'வி.பி.எஸ்'க்கு அனுப்புவது, ஊழியங்களில் பங்குபெறுவது என முன்மாதிரி கிறிஸ்தவ வாழ்வு வாழ்ந்துவந்தார். ஒருமுறை, கிறிஸ்மஸ் ஆராதனையில் கலந்துகொள்ள, அதிகாலை 4 மணிக்கு கடுங்குளில் BROWNY குடும்பத்தார் 2 கார்களில் ஆலயம் சென்றனர். ஆராதனை முடிந்து காலை 6 மணிக்கு தன் மனைவி - பிள்ளைகளை ஒரு காரில் அனுப்பிவிட்டு, BROWNY மாத்திரம் ஆலய காரியங்களில் ஈடுபட்டார்.
ஆலய வேலைகளை முடித்து, BROWNY வீட்டுக்குப் புறப்படுகையில் பனிக்காற்று வீசியது. போராட்டத்டதுடன் கார் ஓட்டிய அவர், பனியின் மங்கலான ஒளியில் ஒரு காட்சியைக் கண்டார். அந்தோ! ஒரு மனிதன் அரைகுறை ஆடையுடன் வாட்டும் குளிரில் சாலையோரத்தில் உயிருக்கு போராடிக்கொண்டிருந்தான். இதைக் கண்ட BROWNY ஒடிச்சென்று, தன் மனைவி தனக்களித்த கிறிஸ்மஸ் பரிசான ஷர்ட் மற்றும் ஓவர்-கோட் ஆகியவற்றை அம்மனிதனுக்கு அளித்து அவனுக்கு உதவினார். நல்ல சமாரியன் போல அவனுக்கு உணவு மற்றும் மருத்துவ வசதி ஏற்பாடு செய்து உதவினார். தாமதமாக வீடு திரும்பிய அவர் சாலையில் உயிருக்கு போராடிய மனிதனைப் பற்றி தன் மனைவியிடம் கூறினார். இதைக் கேட்ட அவரது மனைவி, உள்ளம் உடைந்து மனங்கசந்து அழுதார். காரணம் என்ன தெரியமா? அதிகாலையில் பிள்ளைகளுடன் தாம் வீடு திரும்பிய போது சாலையில் ஒரு மூதாட்டி குளிரில் குற்றுயிராய்க் கிடந்ததைக் கண்டும், உதவிசெய்யாமல் தான் வந்துவிட்டதை எண்ணி, விம்மி, மனம் கலங்கினார். BROWNY அவருக்கு ஆறுதல் கூறவே, அவர் தன் கணவரின் நற்செயலைப்போல் தாமும் இனி பாதிக்கப்பட்டோருக்கு உதவி செய்ய உறுதியேற்றார்.
பிரியமானவர்களே! நாமும் இந்த கிறிஸ்மஸ் காலங்களில் BROWNYயைப்போல நம்மைச் சுற்றிலும் தேவைகளில் வாழுவோருக்கு உதவிகள் செய்யவேண்டும். அவ்வாறு நாம் செயல் வீரர்களாய் வாழும்போது இயேசு இரட்சகர், 'இதை எனக்கே செய்தீர்கள்' என நம்மைப் பாராட்டி ஆசீர்வதிப்பார். வேதம் இவ்விதமாய் சொல்கிறது:

உதவியற்ற சிறுமையானவனை கர்த்தர் விடுவிப்பார். சங்-72:12
சிறுனைப்பட்டவர்களுக்கு தேவன் ஆறுதல் செய்கிறார். 2கொரி-7:6
சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான். சங்-41:1

---

M.AZARIAH GNANADOSS M.A, M.ED
EDITOR, RATCHIPPU TAMIL CHRISTIAN MONTHLY, SALIGRAMAM, CHENNAI-93. MOBILE:9962924900

=====================================================================================



இந்திய கிறிஸ்தவ திருச்சபை சரிதை

(1முதல் 21ம் நூற்றாண்டுவரை)

# இரண்டாயிரம் ஆண்டு வரலாறு
# 2ம் வருகைக்குத் தயாராகு

தொகுதி-9 பகுதி-1 எப்பிசோடு-41 டிசம்பர் 2025

**கட்டுரை ஆசிரியர்: அறிவர். திருமதி. சலோமி மனோகர்**

**9. பதினேழாம் நூற்றாண்டில் இந்தியா**

**1. ஜஹாங்கீர், ஷாஜகான், ஔவுரங்கசீப்**

அக்பரின் வாரிசுகள் எவரும் அவருக்கு நிகரானவர்கள் அல்லர். கி.பி.17ம் நூற்றாண்டில் உன்னத நிலையை அடைந்த முகலாயர் ஆட்சியில் இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ போன்ற பல்வேறு இனங்கள் மற்றும் மதங்களை சார்ந்த மக்கள் சமாதானமாக வாழ்ந்தனர்.

**ஜஹாங்கீர்:** அக்பர் - ஜோதாபாய் ஆகியோரின் மகன் ஜஹாங்கீர். ஜஹாங்கீர் கி.பி.1569ல் ஃபதேபூர்-சிக்ரியில் பிறந்து 22ஆண்டுகள் (1605-1627) ஆட்சி செய்தார். ஜஹாங்கீர் என்றால் 'உலகத்தை வென்றவர்' என்று பொருள். இந்து-முஸ்லீம் குடிமக்கள் மீது சம-மரியாதை கொண்டவர். 'நீதியின் தங்க சங்கிலி' எனப்படும் GOLDEN CHAIN OF JUSTICE அவரது சாதனை ஆகும். 60 மணிகள் கொண்ட இச்சங்கிலி, யமுனை நதிக்கரையில் 'ஷாஹ்புர்ஜ்' மற்றும் 'கல்தூண்' இடையே கட்டப்பட்டிருந்தது. இது மக்களுக்கு நீதியை உறுதி செய்யும் அடையாள மாக இருந்தது. நீதி மறுக்கப்பட்ட எவரும் இச்சங்கிலியை இழுப்பதன்மூலம், நீதிமன்றங்களைத் தவிர்த்து, பேரரசரிடம், நேரடியாக தங்கள் வழக்கை முன்வைக்க முடியும்.

ஜஹாங்கீர் குடிப்பழக்கம் உடையவர்; ஆனால், போதை பொருட்களுக்கு தம் ராஜ்யத்தில், தடைவிதித்தார். விவசாயிகளின் நிலங்களை நிலப்பிரபுக்கள் ஆக்கிரமிகக் காரணமாயிருந்த சில விதிகளை அவர் தடை செய்தார்.

**ஷாஜஹான்:** ஜஹாங்கீர் இறந்தபின், கி.பி.1627ல், அவரது மகன் ஷாஜகான் முகலாயப் பேரரசராகப் பதவியேற்றார். ஷாஜகானின் மனைவி மும்தாஜ் கிறிஸ்தவர்களின் மீது மிகுந்த வெறுப்புடையவராக இருந்தார். கி.பி.1616ல் சர்.தாமஸ் ரோ, 'ஷாஜஹான் கிறிஸ்தவர்களை வெறுப்பவர்' என்று எழுதுகிறார். முகலாய அரசுப்பணியிலிருந்த 400 கிறிஸ்தவர்கள் ஷஜஹான் முன் நிறுத்தப்பட்டபோது, இஸ்லாம் மதத்துக்கு மாறும்படி அவர்களுக்கு அவர் உத்தரவிட்டார். அவர்களில் பலர் மதம் மாறினார்கள்; மறுத்தவர்கள் அவ்விடத்திலேயே வெட்டிக் கொல்லப் பட்டனர். அந்த 400 பேரில் இருந்த கிறிஸ்தவப் பெண்கள் முகலாய அரச பிரதிநிதிகளின் பாலியல் பசிக்கு பகிர்ந்தளிக்கப்பட்டனர். கிறிஸ்தவர் மீதான கொடுமைகள் தொடர்கதையாயின.

போர்ச்சுக்கீசிய கடற்கொள்ளையர்கள் முகலாய அரசுக்கு அச்சுறுத்தலாக இருந்ததே கிறிஸ்தவர் கள் மீதான ஷாஜஹானின் வெறுப்பிற்குக் காரணம்.

பிற்காலத்தில் ஷாஜஹான் வங்காளத்தின் ஹூப்ளியில் கிறிஸ்தவ தேவாலயம் அமைக்க அனுமதி வழங்கினார். ஷாஜஹானின் மூத்தமகன் தாராஷிகோ அவரது மனைவி பாய் உதய்புரி மூலம் கிறிஸ்தவராக மாறியிருந்தார். இந்தச் சம்பவங்களெல்லாம் சிறு மாற்றத்துடன் வரலாற்றில் பதிவு செய்யப் பட்டிருக்கின்றன. கி.பி.1633ல் பெனாரஸ் பகுதியில் 'பழைய கோயில்களை இடியுங்கள்' 'புதிய கோவில்களை கட்டவேண்டாம்' என உத்தரவு இடப்பட்டது. கி.பி.1634ல் இந்து-முஸ்லிம் கலப்பு திருமணம் தடைசெய்யப்பட்டது.

முகலாயப் பேரரசு, ஒட்டோமான் பேரரசுடன் நல்லுறவு மற்றும் போர்த்துகீசியருடன் மோதல்கள் என ஆட்சி செய்தது. தாஜ்மஹால், செங்கோட்டை உள்ளிட்ட அழகிய நினைவுச் சின்னங்களை ஷாஜகான் உலகிற்கு வழங்கியுள்ளார்.

**ஔரங்கசீப்:** (கி.பி.1658-1707) தனது தந்தையையும் மூத்த சகோதரனையும் கொன்றுவிட்டு, முகலாயப் பேரரசர் ஆனார் ஔரங்கசீப். அவர், 'ஆலம்கிர்' (உலகின் வெற்றியாளர்) என பெயர் பெற்றார். கிறிஸ்தவர்களுடனான அவரது உறவு சிக்கலானது; அதில் சகிப்புத்தன்மை மற்றும் மோதல் ஆகிய இரண்டும் காணப்பட்டது. ஆரம்பத்தில் ஔரங்கசீப், தேவாலயங்களை நிறுவ கிறிஸ்தவ மிஷனரிகளை அனுமதித்தார்; ஆனால் பிற்காலத்தில், அதற்கு கட்டுப்பாடுகள் விதித்ததோடு, சர்ச்சுகளை அழிக்கவும் செய்தார்.

ஔரங்கசீப்புடன் நடந்த பதவிச்சண்டையில் தோல்வியுற்ற அவரது சகோதார் தாராஷிகோ, இந்தியாவின் மூலைகளில் தலைமறைவாய் வாழ்ந்து வந்த போது ஒரு முழு கிறிஸ்தவராக மாறியிருந்தார். ஔரங்கசீப், தாராஷிகோவை சிரச்சேதம் செய்து கொல்ல உத்தவு பிறப்பித்து விட்டு, தாராஷிகோவின் மனைவியான பாய் உதய்புரி|யை, திருமணம் செய்துகொண்;டர்.

தாராஷிகோ தனது சிரச்சேதத்தின்போது, 'நான் இஸ்லாமை புறக்கணிக்கிறேன்; பரமண்டலத்தில் இருக்கும் பிதாவே என் தேவன்' என சொன்னதாகவும்; சிரச்சேதம் ஆகாதிருந்தால், அவர் ஒரு கிறிஸ்தவ பாதுஷாவாய் ஆகியிருப்பார் எனவும், அவருக்கு நெருக்கமான இத்தாலிய மருத்துவர், நிகாலோ மானுச்சி குறிப்பிடுகிறார்.

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடரும்......

---

**AUTHOR: DR. MRS. SALOMI MANOHAR M.A, M.PHIL, P.HD ASSISTANT PROFESSOR (RTD), (POPE'S COLLEGE, SAWYERPURAM) THIRUVANMIYUR, CHENNAI-41, SOUTH INDIA**

====================================================================================

வசன தியானம்-164

# கிறிஸ்து இயேசு பிறந்துவிட்டார்

## நம் ஒவ்வொருவரின் இதயங்களிலும் அவருக்கு இடத்தை தயார் செய்வோம்



சத்திரத்திலே அவர்களுக்கு இடம் இல்லாதிருந்தபடியினால், மரியாள் தன் முதற்பேறான குமாரனைப்பெற்று, பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தினாள். லூக்.2:7

**"Joy to the world, the Lord is come!..... ......Let every heart prepare Him room"**

என்ற கிறிஸ்மஸ் பாடலின் இந்த வரிகளை நம் இதயத்தில் ஏற்றிருக்கிறோமா? இயேசுவுக்கு இதயத்தில் இடந்தர நிபந்தனைகள் எதுமில்லை. இருப்பினும், அதற்கான ஆயத்தம் அவசிய மாகும். ஒரு குழந்தையின் பிறப்புக்காக நாம் தயாராவது போல, குழந்தை இயேசுவுக்காய் நம் இதயங்களைத் தயார்படுத்த வேண்டும். குழந்தை இயேசுவின் பிறப்புக்கு தயாராவது என்பது நம் முழு வாழ்க்கையும் மாறுவதற்குத் தயாராவதாகும். அதாவது, நம் இல்லங்களில் மட்டுமல்ல, நம் உள்ளங்களிலும் இடத்தை தயார் செய்ய வேண்டும்.

கிறிஸ்மஸ் நாளை எதிர்நோக்குகையில், நம் இதயங்களைப் பற்றி சிந்திப்போம். நாம் கிறிஸ்துவை வரவேற்றிருக்கிறோமா?... அல்லது நம் உள்ளத்தில் அவரது வசிப்பிடத்தை மட்டுப் படுத்தியிருக்கிறோமா?. அவரது பிரசன்னம் நம் வாழ்க்கையை மாற்றவதற்கு அனுமதித்தி ருக்கிறோமா?... அல்லது நமது பழைய வாழ்க்கை முறையைப் பராமரிக்க முயன்றிருக் கிறோமா?. நாம் இயேசுவை ஏற்றுக்கொண்டிருக்கிறோமா?... அல்லது அவருக்கும் நமக்கும் இடையேயான தூரத்தை அதிகரித்திருக்கிறோமா?

இயேசுவுக்கு இடம் தயார் செய்ய வேண்டிய நேரம் இது. நம் இதயத்தில் இயேசுவுக்கு இடம் தராதபடி, நம்மைத் தடுத்து நிறுத்துவது எது? சற்றே சிந்திப்போம். மாட்டுக்கொட்டிலை ஏற்றுக்கொண்ட அவர் நாம் தரும் எத்தகைய தாழ்ந்த இடத்தையும் ஏற்றுக்கொள்வார். அவர் தமது கிருபையால், நம்முடைய இதயங்களை தாம் வசிக்கும் இல்லங்களாக மாற்றுகிறார்.

நம் பிள்ளைகளிடம் கேட்போம்: நீ, சத்திரக்காரராக அல்லது வீட்டு உரிமையாளராக இருந்தால் இயேசுவுக்கு என்ன செய்திருப்பாய்? உங்களை நீங்களே கேளுங்கள்: நீ ஒரு யூதப் பெண் அல்லது ஏரோதுவாக இருந்திருந்தால் என்ன செய்திருப்பாய்?. இதற்கு நம் பதில் என்ன?

வாழ்க்கையில் இயேசுவுக்கு இடம் கொடுப்பதன் அர்த்தம் என்ன என்று நம்; குடும்பத்தாரோடு பேசுவோம். நம் குடும்பத்தினர் தங்கள் இதயங்களில் இயேசுவுக்கு இடம் கொடுக்கக்கூடிய வழிகள் குறித்து நம் இல்லங்களில் விவாதிப்போம். இயேசுவுக்கு இடமளிக்க நம்மையும் நம் குடும்பத்தையும் அர்ப்பணிப்போம். கர்த்தர் உங்களை ஆசீர்;வதிப்பாராக. ஆமென்.

அருட்திரு. தர்மராஜா, ஊழிய இயக்குநர், இரட்சிப்பு ஊழியங்கள், சென்னை-93, தென்னிந்தியா

=========================================================================

# ஜெப-ஜன்னல் ஜெப நேரங்கள் டிசம்பர் 2025

### ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்

நாள்: 12-12-2025 இரண்டாம் வெள்ளி
நேரம்: காலை 5-முதல் 6-மணி வரை.

### ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்

நாள்: 19-12-2025 மூன்றாம் வெள்ளி
நேரம்: மதியம் 1-முதல் 2-மணி வரை.

### ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்

நாள்: 26-12-2025 நான்காம் வெள்ளி
நேரம்: இரவு 8-முதல் 10-மணி வரை.

பிரியமானவர்களே! இந்த ஜெப-ஜன்னல் ஜெப-நேரங்களில் தானி-6:10 வசனத்தின்படி "தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்திருக்க" ஜெபித்ததைப் போல் நமது இயக்குநரும், ஜெப-ஜன்னல் ஜெப-வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக் கிறார்கள். நீங்களும் இந்த நேரங்களில் உங்கள் ஆலயம் நோக்கி ஜெபிக்கும்படியாக அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

==========================================================================================

## DETAILS ABOUT US


### CONTACT DETAILS:

MOBILE: 9962924900/7871676100
WHATSAPP: 9789914463/7871676100
E-MAIL: sjddharmaraja@gmail.com
OUR WEBSITE: www.ratchippu.com

POSTAL ADDRESS: REV. S.J.D. DHARMARAJA,
MISSION DIRECTOR, NO: 4/2-A, BARATHI ST.,
GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93
ADDL. E-MAIL: ratchippuratchippu@gmail.com


### BANK DETAILS:

NAME: DHARMARAJA SJD.
S.B. ACCOUNT NO: 601071548.
BANK & BRANCH: INDIAN BANK, NESAPAKKAM

IFSC CODE: IDIB000N122.
BANK ADDRESS: NESAPAKKAM, CHENNAI-78.

### UPI DETAILS:

UPI NAME: GOOGL-PAY (G-PAY)
NAME: REV. DHARMARAJA SJD

G-PAY NUMBER: 9789914463

==========================================================================================
=

# செய்தித்துளிகள் டிசம்பர் 2025

1.அமெரிக்க - சீனா வரிவிதிப்பு பிரச்சனை நீடித்து வரும் நிலையில், சீன அழைப்பை ஏற்று தாம் ஏப்ரல்-2026ல் பெய்ஜிங் செல்வதாகவும் அமெரிக்க அழைப்பை ஏற்று சீன அதிபர் அமெரிக்கா வரவிருப்பதாகவும் டிரம்ப் தகவல்.

2.இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு டிச-2025ல் இந்தியாவில் அரசுமுறைப் பயணம் செய்ய திட்டமிட்டிருந்த நிலையில் பாதுகாப்பு காரணங்கருதி அவர் 3ம் முறையாக தனது இந்தியப் பயணத்தை தள்ளி வைத்துள்ளார்.

3.ஏசி அல்லாத ஸ்லீப்பர் பெட்டிகளிலும் பெட்-ஷீட், தலையணை வழங்கும் வசதி ஜனவரி 2026 முதல் கொண்டு வரப்படுவதாகவும், கட்டணம் செலுத்தி இவ்வசதியைப் பெறலாம் எனவும் தென்னக இரயில்வே அறிவிப்பு.

4.கேரள மாநிலம் கோழிக்கோடு பல்கலைக்கழகத்தில் கடந்த நவ-25ம் தேதி நடைபெற்ற உளவியல் மன-அழுத்த மேலாண்மை பட்டப்படிப்பு தேர்வில், 2024ம் ஆண்டிற்கான வினாத்தாள் வழங்கப்பட்டதால் மாணவர்கள் அவதி.

5.இலங்கை பெண்கள் கிரிக்கெட் அணி டிச.21 முதல் 30ம் தேதி வரை இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து, ஐந்து டி20 போட்டிகளில் விளையாடுகிறது. இதற்கான கால அட்டவணையை இந்திய கிரிக்கெட் வாரியம் வெளியிட்டது.

==========================================================================================

# கிறிஸ்துமஸ் 2025 நல்வாழ்த்துக்கள்

அன்பார்ந்த இரட்சிப்பு பத்திரிக்கையின் வாசகர்கள், ஆதரவாளர்கள், படைப்பாளர்கள், அலுவலகப் பணியாளர் கள், பணியாளர்கள், கைபிரதி களப்பணி யாளர்கள், தபால்-துறை மற்றும் அச்சகத்து நண்பர்கள் அனைத்து திருச்சபை இறைமக்கள், ஆகிய உங்கள் அனைவருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்கள்.




இரட்சிப்பு
ஊழிய-குடும்பத்தார்

டிசம்பர் 25, 2025, கிறிஸ்துமஸ்